29.06.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### சின்ன வெங்காயம் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் அதிர்ச்சி

சின்ன வெங்காயம் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

வைகாசி பட்டம் துவங்கியதும் வெங்காய நடவு சூடுபிடிக்கும். நடவு சமயத்தில் விதை வெங்காயத்துக்கு தேவை அதிகரிக்கும். அப்போது விற்பனை செய்தால் நல்ல லாபம் கிடைக்கும் என்ற எண்ணத்தில் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் சின்ன வெங்காயத்தை இருப்பு வைப்பது வழக்கம். நடப்பாண்டு போதிய அளவுக்கு கோடை மழை பெய்யாததால் வெங்காய பரப்பை அதிகரிக்க முடியாமல் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர். இதனால் குறைந்த பரப்பளவிலேயே விவசாயிகள் வெங்காயம் நடவு செய்தனர். தண்ணீர் பற்றாக்குறையால் வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டு வந்த ஏராளமான நிலங்களை தற்போது விவசாயிகள் தரிசாக போட்டுள்ளனர்.

அதன் காரணமாக விதைக்கான பழைய இருப்பு வெங்காயத்துக்கான தேவை குறைந்து விட்டது. விதைக்காக சேமித்து வைத்திருந்த வெங்காயத்தை விவசாயிகள் மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

ஒரு மாதத்தில் வைகாசி பட்ட வெங்காயம் அறுவடைக்கு வந்து விடும் அப்போது சந்தைக்கு வரத்து அதிகரித்து வெங்காயத்தின் விலை மேலும் சரிவை சந்திக்கும் என்பதால் இருப்பு வெங்காயத்தை விற்பனை செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கடந்த மாதம் ரூ. 700-க்கு விற்பனையான 20 கிலோ கொண்ட ஒரு சிப்பம் சின்ன வெங்காயம், தற்போது ரூ. 500 ஆக குறைந்துள்ளது. சிறிய, நடுத்தர வெங்காயத்தின் விலை மேலும் குறைந்து விட்டது.

பெல்லாரி பெரிய வெங்காயத்தின் விலை குறைந்ததும் பொதுமக்கள் அதை அதிகம் வாங்கத் துவங்கினர். இதுவும் சின்ன வெங்காயம் விலை குறைந்ததற்கு காரணமாக அமைந்துள்ளது. சின்ன வெங்காயம் விலை வீழ்ச்சியால் விவசாயிகளை அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

## சூரியகாந்தியில் பச்சைக் காய்ப் புழுவை கட்டுப்படுத்த வேளாண்துறை யோசனை

சூரியகாந்தியில் பச்சைக் காய் புழுவின் தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்து வேளாண் இணை இயக்குநர் அ. அல்தாப் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கரூர் மாவட்டத்தில் கிருஷ்ணராயபுரம், தாந்தோணி, தரகம்பட்டி ஆகிய வட்டாரங்களில் சூரியகாந்தி பயிர் பயிரிடப்பட்டு வருகிறது. சூரியகாந்தி பயிரிட்டு 20 முதல் 30 நாட்கள் ஆன நிலையில் பச்சை காய்ப்புழு (ஹெலிகோவெர்பா) தாக்குதல் ஆங்காங்கே தென்படுகிறது. இப்புழுவானது சூரியகாந்தி இலையை சுரண்டி சாப்பிடுவதால் இலையின் வளர்ச்சி பாதிக்கிறது. எனவே ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையைப் பின்பற்றி இந்தப் புழுவை கட்டுப்படுத்தலாம். ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையில் பெரிய புழுக்களை கையில் எடுத்து அழித்திட வேண்டும். மேலும் சூரியகாந்தியில் ஊடுபயிராக பச்சைப்பயறு, உளுந்து, கடலை போன்றவை பயிரிட்டும், சூரியகாந்தி வயலை சுற்றிலும் வரப்புகளில் பொறிப்பயிரான செண்டுமல்லி செடியை விதைப்பதன் மூலமும் பச்சைக் காய்ப் புழுவை அழிக்கலாம்.மேலும் விளக்குப்பொறி ஒரு ஏக்கருக்கு ஒன்று என்ற எண்ணிக்கையில் வைத்தும், 5 சதவீதம் வேப்ப எண்ணெய் (அல்லது) 5 சதவீதம் வேப்பங்கொட்டைச் சாறு தெளித்தும், டைகுளோர்வாஸ் 76 ஈசி ஏக்கருக்கு 200 மிலி (அல்லது) பாசலோன் 35ஈசி ஏக்கருக்கு 400 மிலி என்ற அளவில் தெளித்தும் கட்டுப்படுத்தலாம்.

மேலும் இதுபோன்ற தாக்குதல் மற்ற இடங்களில் தென்பட்டால் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர் அல்லது அருகிலுள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்பு கொண்டு பயிர் பாதுகாப்பு முறைகளை தெரிந்து கொள்ளலாம்.

## முதல்போக நெல் சாகுபடி தாமதம்: பருவ மழைக்குத் தப்புமா அறுவடை? விவசாயிகள் தவிப்பு

தேனி மாவட்டத்தில் முதல் போக நெல் சாகுபடி தாமதமாகி வருவதால் வடகிழக்கு பருவ மழையில் அறுவடைப் பணிகள் பாதிக்கும் என்று விவசாயிகள் தவிப்பில் உள்ளனர்.

முல்லைப் பெரியாறு அணையில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜூன் முதல் வாரம், தேனி மாவட்டத்துக்கு உள்பட்ட பகுதிகளின் முதல் போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படும். பெரியாறு அணையில் இருந்து

திறக்கப்படும் தண்ணீரை பயன்படுத்தி கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளில் 11,807 ஏக்கர், போடி பகுதியில் 488 ஏக்கர், தேனி பகுதியில் 2,412 ஏக்கர் உள்பட மொத்தம் 14,707 ஏக்கர் பரப்பளவில் இரு போக நெல் சாகுபடி நடந்து வருகிறது.

தற்போது பெரியாறு அணை நீர்ப்பிடிப்பில் குறைந்த அளவு மழை பெய்து வருவதாலும், அணையில் தண்ணீர் இருப்பு குறைவாக இருந்து வருவதாலும், இது வரை அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கவில்லை.

பெரியாறு அணையில் தண்ணீர் திறப்பை எதிர்பார்த்து கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் வழக்கம் போல ஜூன் முதல் வாரம், முதல் போக சாகுபடிக்கு நெல் நாற்றாங்கால் தயாரிக்கும் பணியை விவசாயிகள் தொடங்கினர். ஊற்று நீர் மற்றும் ஆழ்துளை கிணற்று நீர் மூலம் தயாரிக்கப்பட்டுள்ள நெல் நாற்றுகள் தற்போது 25 நாள்கள் முதிர்வடைந்து நடவுப் பருவத்தில் உள்ளன. ஆனால் அணையில் இருந்து முதல் போக சாகுபடிக்கு தண்ணீர் திறப்பதில் காலதாமதம் ஏற்படுவதால், நாற்றாங்கல் வீணாகும் என்றும், வரும் ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் நடைபெறும் அறுவடை பணி, வடகிழக்கு பருவ மழையால் பாதிக்கும் என்றும் விவசாயிகள் தவிப்பில் உள்ளனர்.

பெரியாறு அணையில் இருந்து முதல் போக நெல் சாகுபடிக்கு விரைவில் தண்ணீர் திறக்கவும், காலதாமதமாக தொடங்கும் முதல் போக நெல் சாகுபடிக்கு, நெல் நாற்று நடவு இயந்திரம், நெல் அறுவடை காலத்தில் அறுவடை இயந்திரம், தார் பாய்கள் ஆகியவற்றை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் விவசாய சங்கங்கள் மூலம் தட்டுபாடின்றி வழங்கவும், நெல் நேரடி கொள்முதல் நிலையங்களை உரிய காலத்தில் திறக்கவும் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீர்மட்டம்: பெரியாறு அணை நீர்மட்டம் செவ்வாய்கிழமை 111.90 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 258 கன அடி. அணையில் தண்ணீர் இருப்பு 1,215 மில்லியன் கன அடி. அணையில் இருந்து குடிநீர் திட்டங்களுக்காக விநாடிக்கு 250 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

வைகை அணை நீர்மட்டம் 27.40 அடியாக இருந்தது. அணைக்கு தண்ணீர் வரத்து விநாடிக்கு 164 கன அடி. அணையில் இருந்து வினாடிக்கு 60 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

## மழையால் பூக்கள் உதிர்வு: முருங்கை விளைச்சல் பாதிப்பு

ஆண்டிபட்டி பகுதியில் சாரல் மழையால் முருங்கை பூக்கள் உதிர்ந்து விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் வேதனை தெரிவித்தனர்.

ஆண்டிபட்டி, புள்ளிமான்கோம்பை, கன்னியப்ப பிள்ளைபட்டி, கண்டமனூர் மற்றும் கடமலைக்குண்டு பகுதிகளில் முருங்கை சாகுபடிநடைபெறுகிறது. இப்பகுதியில் தற்போது பூக்கள் பூக்க துவங்கியுள்ளன. இதனால் முருங்கைக்கு உரம் வைத்து, மருந்து தெளித்துள்ளனர்.

இந்த நிலையில் ஆண்டிபட்டி மற்றும் கடமலைக்குண்டு பகுதியில் சாரல் மழை பெய்து வருகிறது.

முருங்கை பூக்களுக்கு அடிக்கப்பட்ட மருந்து மற்றும் உரங்கள் வீணாகி வருகின்றன. மேலும் பூக்களில் தண்ணீர் தேங்கி அழுகிப்போகின்றன. இதனால் முருங்கை விளைச்சல் பாதிப்படைந்துள்ளது. கடந்த சில நாள்களுக்கு முன் காற்று வீசி பூக்களை உதிர்த்து விட்டது. இந்த நிலையில் மழை பெய்து பூக்களையும் உரத்தையும் வீணாக்கிவிட்டதாக முருங்கை விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர்.

## ராஜபாளையத்தில் இயந்திரம் மூலம் கரும்பு அறுவடை

ராஜபாளையம் அருகே கணபதிசுந்தரநாச்சியார்புரத்தில் இயந்திரம் மூலம் கரும்பு அறுவடை செய்யும் பணி ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது.

இயந்திரம் மூலம் 4 ஏக்கர் கரும்பு ஒரே நாளில் அறுவடை செய்ய முடியும். இதையே வேலையாள்களை வைத்து அறுவடை செய்தால் ஒரு மாதமாகும்.

இயந்திரம் மூலம் அறுவடை செய்யும் போது விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.450 முதல் 500 வரை மட்டுமே செலவாகும். ஆள்களை வைத்து அறுவடை செய்தால் ரூ.600 முதல் 700 வரை செலவாகும்.

ஆனால் இயந்திரம் மூலம் கரும்பு அறுவடை செய்ய விரும்பும் விவசாயிகள் நாலரை அடி இடைவெளியில் சமமாக கரும்புகளை நடவு செய்திருக்க வேண்டும் என சர்க்கரை ஆலை அலுவலர்கள் தெரிவித்தனர்.

அரசு அறிவித்தபடி ஒரு டன் கரும்புக்கு ரூ.2800ஐ வழங்கவேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

**நாற்றங்கால் முதல் நடவு வரையிலான வேலை இனி சுலபம்! விவசாயிகளை ஈர்க்கும் புதிய முறை**



நெல் நடவு செய்வதற்கு ஆள் தட்டுப்பாடு இருக்கும் நிலையில், விதைநெல் மட்டும் வழங்கினால் போதும், நாற்றங்கால் தயார்செய்து,இயந்திரத்தின் மூலம் நெல் நடவு செய்து அளிக்கும் பணியை மேற்கொண்டு வருகிறார் நாமக்கல்லைச் சேர்ந்த பி.பி.ஏ. பட்டதாரி கே. மயில்சாமி.

இயற்கை இடர்பாடுகளால் விவசாயம் கடும் பாதிப்பை சந்தித்து வரும் நிலையில்,விவசாயிகள் விவசாயம், செய்தாலும் வேலைகளுக்கு ஆள்கள் தட்டுப்பாடு இருந்து வருகிறது. இதனால் நெல் நடவு முறையில் இயந்திரப் பயன்பாட்டை வேளாண் துறை அறிமுகப்படுத்தி,விவசாயிகளை ஊக்கப்படுத்தி வருகிறது. இச்சூழலில் நிகழாண்டில் விவசாயிகளின் வேளாண் பணியை மேலும் எளிதாக்கும் வகையில், நாற்றங்கால் தயார்செய்து, நெல் நடவு செய்தல் வரையிலான பணியை ஒப்பந்த அடிப்படையில் செய்து கொடுக்கும் பணியை லால்குடி வட்டத்தில் செயல்படுத்தத் தொடங்கியிருக்கிறார் நாமக்கல்லைச் சேர்ந்த இளைஞர் கே. மயில்சாமி (31).

பி.பி.ஏ. படித்து, தனியார் காகித நிறுவனத்தில் பணியாற்றி வந்த இவர், நாமக்கல் மாவட்டத்தில் கடந்த 8 ஆண்டுகளுக்கு முன் வேளாண் துறை சார்பில் நடைபெற்ற இயந்திர நெல் நடவு செயல் விளக்கத்தைப் பார்த்து, தனது வேலையை விட்டுவிட்டு, இயந்திர நெல் நடவுப் பணியைச் செய்து கொடுக்கத் தொடங்கியதாகத் தெரிவித்தார்.

விதை நெல் தந்தால் போதும்: பொதுவாக நெல் நடவு நடைபெறும் நேரத்தில் டெல்டா பகுதிகளுக்கு வந்துவிடுவோம். என்னிடம் 5 இயந்திர நெல் நடவு இயந்திரங்கள் உள்ளன. 40 கூலித் தொழிலாளர்கள் உள்ளனர்.

ஏக்கருக்கு ஏற்றவாறு விதை நெல் தந்தால் போதும். நாங்களே பாய் நாற்றங்கால் அல்லது தட்டு நாற்றங்கால் என விவசாயிகளின் தேவைக்கேற்ப நாற்றங்காலைத் தயார் செய்து, எங்களின் இயந்திரங்கள் மூலம் நடவுப் பணியைச் செய்து கொடுத்து விடுவோம்.

இப்பணிக்காக ஏக்கருக்கு ரூ. 3500 என்ற வீதத்தில் தொகை பெறுகிறோம். அதேநேரத்தில் செலவும் அதே அளவில் இருக்கிறது. நெல் நடவு இயந்திரத்துக்கான டீசல், தொழிலாளர்களின் சம்பளம், உணவு போன்றவற்றுக்குச் செலவிடுவதால்,அதிக லாபம் கிடைப்பதில்லை. ஆனாலும் தொடர்ந்து பணி கிடைப்பதால் பிரச்னைகள் ஏதுமில்லை என்கிறார் மயில்சாமி. டெல்டா மாவட்டப் பகுதிகளில் பெரும்பாலான பகுதிகளில் நாங்கள் இதுபோன்ற பணியைச் செய்து வருகிறோம். திருச்சிமாவட்டத்தில் இந்தாண்டுதான் குறிப்பாக லால்குடி வட்டாரத்தில் அன்பில், செங்கரையூர், களத்தில் வென்றான்பேட்டை,கீழப்பெருங்காவூர், பண்புஅறம்சுற்றி, கல்விக்குடி போன்ற கிராமங்களில் இயந்திர நெல் நடவுப்பணியை மேற்கொண்டு வருகிறோம்.

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று விவசாயப் பணிகளைச்செய்து வந்த எங்களுக்கு,கடந்தாண்டில் ஆந்திர மாநிலத்திலிருந்தும் அழைப்பு வந்தது. சுமார் ஒரு மாதத்துக்கும் மேலாக அங்கு தங்கி நெல் நடவுப் பணியைச் செய்து கொடுத்து வந்திருக்கிறோம். படிப்புக்கேற்ற வேலை கிடைத்தாலும், விவசாயப் பணிக்காக ஈடுபட்டு, பலருக்கு வேலைவாய்ப்பை வழங்கக்கூடிய நிலை இருப்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்கிறார் மயில்சாமி.

விவசாயிகளுக்கு பெரும் பயன்: ஆள் பற்றாக்குறையால் விவசாயப் பணி பாதிக்கப்படக் கூடாது, புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும் போன்ற நோக்கில், இயந்திரநெல் நடவு முறையை அரசு ஊக்கப்படுத்திவருகிறது. விவசாயிகளுக்கு பல்வேறு நிலைகளில் மானியத்தை அரசு வழங்கி வரும் நிலையில், இதுபோன்ற பணிகள் மேலும் பயனளிக்கும் என்றார் திருச்சி மாவட்ட வேளாண் இணை இயக்குநர் இரா. சந்திரசேகரன்.

## விவசாயிகளுக்கான விழிப்புணர்வுப் பெருவிழா

விவசாயிகளுக்கான விழிப்புணர்வுப் பெருவிழா, திண்டிவனத்தில் திங்கள் கிழமை நடைபெற்றது.

விழாவில் சட்டத்துறை அமைச்சர் சி.வி.சண்முகம் கலந்து கொண்டு வேளாண் பொருள்கள் விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்து, தலைமை உரையாற்றினார்.

தொடர்ந்து "சிறுதானிய பயிர் சாகுபடி' என்ற நூல் வெளியிடப்பட்டது.

இதில் பிரதமர் பயிர் காப்பீட்டுத் திட்டம் மற்றும் பருவநிலை மாற்றத்துக்கு உகந்த சிறுதானிய பயிர் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் சா.ஷீபா, விழுப்புரம் மாவட்ட ஆட்சியர்

எம்.லட்சுமி ஆகியோர் சிறப்புரையாற்றனர். இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சு.ராஜேந்திரன், சட்டப்பேரவை உறுப்பினர் பி.சீத்தாபதி சொக்கலிங்கம், எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத் தலைவர் ர.வைத்தியநாதன், வேளாண்மை இணை இயக்குநர் ஆ.ரத்தினசபாபதி, கால்நடைத் துறை துணை இயக்குநர் மரு.தா.ராமமூர்த்தி, நபார்டு உதவிப் பொது மேலாளர் விக்ரமன், தொழில்நுட்ப வல்லுநர் வை.ராதாகிருஷ்ணன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## உழவர் பாதுகாப்புத் திட்ட உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை: ஆட்சியர் தகவல்

முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்ட உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படுவதாக மாவட்ட ஆட்சியர் காகர்லா உஷா தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011-ன் கீழ் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ள மகன், மகள் ஆகியோர் இளநிலை, முதுநிலை பட்டப் படிப்புகள் அல்லது தொழிற்கல்வி படிப்புகள் அல்லது பட்டயப்படிப்பு பயில்பவராக இருந்தால், அவர்களுக்கு உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கல்வி உதவித்தொகையும், உறுப்பினர்கள் மற்றும் சார்பு உறுப்பினர்களுக்கு திருமண உதவித்தொகையும், உறுப்பினர்களாக உள்ள நபர்களுக்கு இயற்கை மரணத்திற்கான

உதவித்தொகையும் மற்றும் காசநோய், புற்றுநோய், எய்ட்ஸ் ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தாற்காலிக இயலாமைக்கான உதவித்தொகையும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த 2016 2017-ம் நிதியாண்டிலும் இத்திட்டத்தின்கீழ் உதவித்தொகை வழங்கப்பட உள்ளது. எனவே, உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உறுப்பினர்களாக பதிவு பெற்றவர்கள் தங்களது மகன், மகள் கல்லூரியில் பயில்பவராக

இருப்பின் உரிய மனுவினை தங்கள் பகுதிக்குட்பட்ட கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் அல்லது

சம்பந்தப்பட்ட சமூக பாதுகாப்புத் திட்ட தனி வட்டாட்சியரிடம் அளித்து கல்வி உதவித்தொகையும் மற்றும் இதர உதவித்தொகையும் பெற்று பயனடையலாம்.

## தொடர்ந்து ஏறுமுகத்தில் பருத்தி விலை: குவிண்டால் ரூ. 5,589-க்கு விற்பனை

பருத்திக்கான விலை வாரந்தோறும் குவிண்டாலுக்கு சராசரியாக ரூ. 200 வரை அதிகரித்து வருகிறது. செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ஒரு குவிண்டால் ரூ.5589-க்கு விற்பனையானது.

திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்துக்கு விவசாயிகள் 680 லாட் பருத்தி பஞ்சுகளைக் கொண்டு வந்திருந்தனர்.

திருவாரூர் மாவட்டத்தில் தற்போது பருத்தி செடியிலிருந்து பஞ்சுகள் எடுக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. விவசாயிகள் அறுவடை செய்த பருத்தி பஞ்சுகளை விற்பனை செய்ய ஒழுங்குமுறை விற்பனை கூடங்களுக்கு கொண்டு வருகின்றனர்.

அதன்படி செவ்வாய்க்கிழமை திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நெருங்குடி, அடியக்கமங்கலம், தென் ஓடச்சேரி, சத்தியவாடி, முல்லித்தோப்பு, ஆதிச்சபுரம், கோட்டூர், ராதாமங்கலம், ஊட்டியாணி, சேந்தங்குடி, கங்களாஞ்சேரி,கல்லிக்குடி,பழையவலம், மழை யூர், சித்தாநல்லூர், எட்டியலூர், பிளாக்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வந்த விவசாயிகள் 680 லாட்டுகளில் பஞ்சுகளை ஏலத்துக்கு வைத்திருந்தனர்.

பஞ்சுகளை செம்பனார்கோயில், சேலம் கொங்கனாபுரம், திருப்பூர், விழுப்புரம், கும்பகோணம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வந்த 8 வியாபாரிகள் தாங்கள் கேட்கும் தொகையை ஏலச் சீட்டில் எழுதி ஏலப்பெட்டியில் போட்டிருந்தனர்.

இதையடுத்து பிற்பகல் வேளாண் விற்பனைக் குழு துணை இயக்குநர் மனோகரன், செயலர் சேரலாதன், கண்காணிப்பாளர் ரமணி ஆகியோர் ஏலப் பெட்டியைத் திறந்து வியாபாரிகள் கேட்ட விலையைப் படித்தனர். இதில் அதிகபட்சமாக பருத்தி குவிண்டாலுக்கு ரூ. 5,589 விலை கேட்கப்பட்டிருந்தது.

குறைந்தபட்சமாக ரூ. 4,100 விலையும், சராசரியாக ரூ. 5400 விலை போனது. பருத்தி ஏலம் ஜூன் 7-ஆம் தேதி முதல் தொடங்கியது. அதிலிருந்து வாரந்தோறும் பருத்திக்கான விலை குவிண்டாலுக்கு சராசரியாக ரூ. 200 வரை அதிகம் கிடைப்பதால் விவசாயிகள் பெருமளவில் பருத்தியை ஏலத்துக்குக் கொண்டு வருகின்றனர். திருவாரூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்தை ஆட்சியர் மதிவாணன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அவர் கூறுகையில்,

நடப்பாண்டு இதுவரை 3,412 குவிண்டால் பருத்தி ஏலம் விடப்பட்டுள்ளது. இதன்மூலம் விவசாயிகளுக்கு ரூ. 1.72 கோடி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. பருத்திக்கு நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் தொடர்ந்து ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு வருகின்றனர் என்றார்.

## தக்காளி இலைச்சுருள் நச்சுயிரியை அழிக்க யோசனை

தக்காளிப் பயிரைத் தாக்கும் இலைச்சுருள் நச்சுயிரியை அழிப்பது தொடர்பாக தொலைபேசியில் விவசாயிகளுக்கு ஆலோசனை தெரிவிக்கும் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

புதுக்கோட்டை கிராம வள மையத்தில் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் கேபி- நிறுவனம் இணைந்து நடத்திய நிகழ்ச்சிக்கு, கேபி -நிறுவனத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் ஆர். கணேசமூர்த்தி தலைமை வகித்து பேசியது:

கரூர் மாவட்டத்தின் சில பகுதிகளில் தக்காளி இலைச்சுருள் நச்சுயிரி நோய் கத்தரிப் பயிரைப் பாதித்திருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இந்த நோயால் 80 முதல் 100 சதவிகிதம் வரை பொருளாதார இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

இந்நோய் கரூர் மாவட்டத்தில் தற்போது காணப்பட்டாலும் மற்ற மாவட்டங்களுக்கும் பரவ வாய்ப்புள்ளதால் முன்னெச்சரிக்கையாக இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகள் தக்காளி நோய் தாக்குதலில் இருந்து காத்து கொள்ளலாம் என்றார்.

எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் பயிர் மருத்துவர்கள் ஜி. சுதாகர், பி. செந்தில்குமார், திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர். ராஜ்குமார் ஆகியோர் பங்கேற்று விவசாயிகளின் சந்தேகங்களுக்கு தொலைபேசி

வாயிலாக விளக்கமளித்தனர். கத்தரிச் செடிகள் வளர்ச்சி குன்றி குட்டையாகத் தோன்றுதல், இலைகள் சிறிதாகவும் மேல் நோக்கி சுருண்டும் காணப்படுதல், இலைகள், பூக்கள் பச்சையமற்ற,மஞ்சள் நிறமாகக் காணப்படுதல் ஆகியவை நோயின் அறிகுறிகளாகும்.

இந்த நச்சுயிரியானது வெள்ளை ஈக்கள் மூலமாக ஒரு செடியிலிருந்து மற்றொரு செடிக்குப் பரவுகிறது. எனவே,வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்தி இந்த நச்சுயிரியைக் கட்டுப்படுத்தலாம். மேலும் எதிர்ப்புத் திறன் கொண்ட அர்கா அனன்யா ரகங்களைப் பயிரிடுதல்,வயலைச் சுற்றி தானியப் பயிர்களைப் பயிரிடுதல் மூலமும் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம் என ஆலோசனை வழங்கினர்.ட மேலும் இந்நோய் தொடர்பான சந்தேகங்களுக்கு வேளாண் விஞ்ஞானிகளை 99422-11044, 72999-35542 - ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம். இதில் மாவட்டம் முழுவதிலிருந்தும் 65 விவசாயிகள் பங்கேற்று பேசினர். ஏற்பாடுகளை, ஆராய்ச்சி நிறுவன தொழில்நுட்ப அலுவலர் எஸ். ஏசுதாஸ் செய்திருந்தார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கிருஷ்ணகிரியில் வங்கிகளுக்கான ரூ.4460.29 கோடி கடன் திட்ட அறிக்கை வெளியீடு வேளாண்மைக்கு ரூ.3060 கோடி ஒதுக்கீடு

கிருஷ்ணகிரி : கிருஷ்ணகிரியில் ரூ.4460.29 கோடி வங்கிகளுக்கான கடன் திட்ட அறிக்கை வெளியிடப்பட்டது. வேளாண்மை துறைக்கு ரூ.3060 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தின் முன்னோடி வங்கியான இந்தியன் வங்கி ஒவ்வொரு ஆண்டும் வங்கிகளுக்கான ஆண்டு கடன் திட்டத்தை தயார் செய்து வெளியிட்டு வருகிறது. அதன்படி 2016-17ம் ஆண்டிற்கு ரூ. 4460 கோடியே 29 லட்சம் அளவில் கடன் திட்டம் தயாரிக்கப்பட்டு மாவட்ட கலெக்டர் தலைமையில் நடந்த கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டு கடன் திட்ட அறிக்கை வெளியிடப்பட்டது. மாவட்ட கலெக்டர்

கதிரவன் கடன் திட்ட அறிக்கையை வெளியிட்டார். முதல் பிரிதியை இந்தியன் வங்கியின் மண்டல மேலாளர் சூரியநாராயணன், உதவி பொது மேலாளர் சுவாமிநாதன் ஆகியோர் முன்னிலையில், ரிசர்வ் வங்கியின் உதவி பொது மேலாளர் ரவீந்திரன் பெற்றுக்கொண்டார். நபார்டு வங்கி தயாரித்த வளம் சார்ந்த கடன் திட்டத்தை கணக்கில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்த திட்ட அறிக்கையில், முன்னுரிமை கடன்களுக்காக ரூ.4460 கோடியே 29 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டு கடன் திட்டத்தை விட ரூ.802 கோடியே 85 லட்சம் அதிகமாகும். வேளாண்மை கடன் திட்டங்களுக்காக ரூ.3060 கோடியே 35 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டு ஒதுக்கீட்டை காட்டிலும் ரூ.530 கோடியே 11 லட்சம் அதிகமாகும். குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்காக ரூ.750 கோடியே 25 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்த கடன் அளவில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் உட்பட வர்த்தக வங்கிகளின் பங்கு ரூ.3911 கோடியே 78 லட்சமாகவும், கூட்டுறவு வங்கிகளின் பங்கு ரூ.112 கோடியே 42 லட்சமாகவும், பல்லவன் கிராம வங்கியின் பங்கு ரூ.427 கோடியே 22 லட்சமாகவும், தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தின் பங்கு ரூ.8 கோடியே 87 லட்சமுமாகவும் இருக்கிறது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மந்திராசனம், மகளிர் திட்ட அலுவலர் ராஜசேகர், நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் நஷ்ரீன்சலீம், முன்னோடி வங்கி மேலாளர் பாஸ்கர் மற்றும் வங்கி ஒருங்கிணைப்பாளர்கள், அரசு துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## மழையால் கோரைப்புல் அறுவடை பாதிப்பு

கரூர் : கரூர் மாவட்டத்தின் மானாவாரி பகுதிகளில் கோரைப்புல் சாகுபடியை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். தண்ணீர் தேவை குறைவு குறைந்த நாட்களில் அறுவடை செய்யலாம் என்பதால் கரூர், புகழூர் வட்டார பகுதிகளில் அதிகளவில் கோரைப்புல் பயிரிடப்பட்டுள்ளது. காவிரி மற்றும் அமராவதி ஆற்றுப்பகுதியில் பரவலாக சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது அறுவடைக்கு தயார் ஆனநிலையில் கடந்த சில நாட்களாக மழை பெய்து கொண்டிருக்கிறது. இதனால் கோரைப்புல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது.கரூர் மாவட்டத்தில் பணப்பயிரான நெல், கரும்பு,

மஞ்சள் வாழையை தொடர்ந்து கோரைப்பயிர் அதிக அளவில் பயிரிடப்படகிறது. அறுவடைசெய்த கோரைப்புல்லை காய வைத்து உடனடியாக பாய் உள்ளிட்ட பொருட்களை தயாரித்து விடவேண்டும். இல்லாவிட்டால் கோரைப்புல் நிறம்மாறி உடைந்துவிழும். இதனால் கோரைப்புல்லை மழை பெய்யும்போது அறுவடை செய்வது ஏற்புடையதல்ல என விவசாயிகள் தெரிவித்தனர். கோரைப் புல்லுக்கு நியாமான விலை கிடைக்கவில்லை என தொடர்ந்து வலியுறுத்தியும் அரசு நடவடிக்கை எடுப்பதில்லை என்றனர்.

**உளுந்து சாகுபடியில் அதிக மகசூல் வேளாண்துறை ஆலோசனை**

ராமநாதபுரம், : ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை கடைபிடித்தால் உளுந்து சாகுபடியில் அதிக மகசூல் அள்ளலாம் என விவசாயிகளுக்கு வேளாண்துறையினர்ஆலோசனை வழங்கி உள்ளனர்.ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் நல்ல வடிகால் வசதியுள்ள அனைத்து நிலங்களிலும் உளுந்து சாகுபடி செய்யலாம். ஜூலை-ஆகஸ்ட், செப்டம்பர்-அக்டோபர் காலங்களில் வம்பன் 2,3,4 மற்றும் ஏ.பி.கே.1 ஆகிய ரகங்களை பயிரிடலாம். ஜனவரி-பிப்ரவரி மாதங்களில் டி.எம.வி.1 ரகத்தை பயிரிடலாம். பிப்ரவரி-மார்ச் மாதங்களில் வம்பன் 4 மற்றும் டி.எம்.வி.1 ரகத்தை பயிரிடலாம். ஹெக்டேருக்கு 20 கிலோ விதையை 30*10 சென்டி மீட்டர் இடைவெளியில் விதைக்க வேண்டும். விதைகளை துத்தநாக சல்பேட் 100 பிபி.எம் கரைசலில் 1 கிலோ விதைக்கு 1 லிட்டர் கரைசல் என்ற அளவில் 3 மணி நேரம் ஊற வைத்து விதைக்க வேண்டும்.ஊறிய விதைகளை நிழலில் ஆரம்ப ஈர நிலை வரும் உலர வைத்து 1 மாதம் வரை உபயோகிக்கலாம். 1 ஹெக்டேருக்கு தேவையான விதையுடன் 2 பாக்கெட் ரைசோபியம் (பயிறு) உயிர் உரத்தை ஆறிய அரிசிக் கஞ்சியுடன் கலந்து 15 நிமிடம் நிழலில் உலர்த்தி 24 மணி நேரத்திற்குள் விதைக்க வேண்டும். 1 கிலோ விதைக்கு டிரைகோடெர்மாவிரிடி 4 கிராம் என்ற அளவில் கலந்து விதைக்க வேண்டும்.மண் பரிசோதனை பரிந்துரைப்படி உரமிட வேண்டும். பொது பரிந்துரையின்படி இறவை சாகுபடியாளர்கள் ஹெக்டேருக்கு 25 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்துக்கள் இடவேண்டும். மானாவாரி விவசாயிகள் ஹெக்டேருக்கு 12.5 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்துக்கள் இடவேண்டும்.மணிச்சத்தை ஊட்டமேற்றிய தொழு உரமாக இடவேண்டும். விதைக்கும் முன் கடைசி உழவில் பயறு நுண்ணுரம் ஹெக்டேருக்கு 5 கிலோ இட வேண்டும்.இரவையில் ஹெக்டேருக்கு 500 மில்லி புளுகுளோரலின் களைக்கொல்லியை 625 லிட்டர்

நீரில் கலந்து விதைத்த 3ம் நாள் தெளித்து உடனடியாக நீர் பாய்ச்ச வேண்டும்.

பின், 25வது நாள் கைக்களை எடுக்க வேண்டும். மானாவாரி நிலங்களில் 20மற்றும் 40வது நாளில்கைக்களை எடுக்க வேண்டும். உளுந்துக்கு மொத்தமாக 4 அல்லது 5 முறை நீர் பாய்ச்சினால் போதுமானது ஆகும். குறிப்பாக பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் பருவங்களில் வறட்சியை தவிர்க்க வேண்டும். ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை கடைபிடிக்க வேண்டும் என்றனர்.